11 ஜூலை 2021

Newbec

NEW WAY OF BEING CHURCH

பொதுக் காலம் 15 ஆம் ஞாயிறு

எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்

மாதாந்திர கருப்பொருள்:

**உங்கள் வாயைத் திறந்து ஒடுக்கப்பட்டவர்களைக் காத்தல்**

# நமக்கு என்ன தேவை என்று கடவுளுக்குத் தெரியும்

சீடர்கள் இயேசுவால் தூதுரைக்க அனுப்பப்படும்போது, அவர்கள் எடுத்துச் சென்றது கையில் கைத்தடியும் காலுக்கு மிதியடியும் மட்டுமே. மாற்றுத்துணி கூட எடுத்துச் செல்ல அவர்களுக்கு அனுமதியில்லை. இன்னும் சொல்லப்போனால், அவர்களுடைய அன்றாட தேவைகளுக்கு மக்களின் உபசரிப்பையும் தாராள மனதினையும் மட்டுமே நம்பியிருந்தனர்.



Image: ©shutterstock.com

**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

"உலகம் தோன்றுவதற்கு முன்பே கடவுள் நம்மைக் கிறிஸ்து வழியாகத் தேர்ந்தெடுத்தார்"

(எபேசியர்: 1:4)

ஆமோஸ், இறைவாக்கினர் குழுவின் உறுப்பினர் என்பதற்கு யூதச் சட்டங்கள் குறிப்பிட்டிருந்த எந்தத் தகுதியையும் அவர் கொண்டிருக்கவில்லை. அவர் காட்டு அத்திமரங்களைக் கண்காணிப்பவராகவும், ஆடுகளை மேய்ப்பவராகவும் மட்டுமே இருந்தார். ஆனால், இஸ்ராயேல் மக்களுக்கு தூதுரைக்கும் ஒரு இறைவாக்கினராக இறைவன் அவரை அழைத்தார். இதனால் பெத்தேலில் உள்ள கோயிலில் இறைவாக்குரைக்க வந்த ஆமோசை அவர்கள் ஏற்றுக்கொள்ளாமல் போனதில் வியப்பேதுமில்லை.

இன்றைய வாசகங்களின் வழியாக, கடவுள் நமக்கு என்ன சொல்கிறார்?. பவுல் அடிகளாரின் வார்த்தைகளை இங்கு நாம் நினைவுகூருவோம். " என் அருள் உனக்குப் போதும்" கடவுள் நம்மை அழைத்து அனுப்பும்போது, நம் வாழ்க்கையிலும், நம் சகோதர சகோதரிகளின் வாழ்க்கையிலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த, நமக்கு என்ன தேவை என்பதை அவர் அறிவார். நமக்குத் தேவையானதைக் கடவுள் தருவார்; நாம் விரும்புவதை அல்ல. நம்முடைய அன்றாட தேவைகளுக்காக, கடவுளை முழுமையாகச் சார்ந்து இருக்கவேண்டும் என்பதற்காக இந்த அழைப்பு நமக்கு அருளப்படுகிறது.

கிறிஸ்துவின் சீடர்களாகிய நாம், நம்முடைய நம்பிக்கையைப் பயன்படுத்த, கடவுள் நம் வழியில் அனுப்பும் மனிதர்களோடும், அனைத்து சூழ்நிலைகளோடும் அனுப்பப்படும்போது, உண்மையாகவே எவை முக்கியம் என்பதை நாம் புரிந்துகொள்கிறோமா? நாம் விரும்பும் வகையிலா அல்லது கடவுள் விரும்பும் வகையிலா? இதைப் போன்றா நாம் செய்கிறோம்?

ஒவ்வொரு நாளும் இறைவனின் அமைதியான, மென்மையான சில சமயங்களில் உறுதியான குரலைக் கேட்க அமைதியில் நேரத்தை இறைவனில் செலவிடுவோம். அவர் தம்முடைய அருளினாலும், உண்மையாலும் நம்மை நிரப்ப ஏங்குகிறார். சில சமயம் தூதுரைக்கும் பணியில் நம்மை ஈடுபடுத்துகிறார். அவரில் தீவிரமாக நம்பிக்கை வைத்து அவருடைய குரலுக்கு செவிமடுக்கவும், அறிந்துகொள்ளவும், அதாவது சுயநலத்திலிருந்தும், சுய தேவையை நிறைவு செய்வதிலும் இருந்து நம்மை விடுவித்து, அவர்மீது முழுமையான நம்பிக்கை மற்றும் எதிர்நோக்கைக் கொண்டு வரும் ஒரு முழுமையான மாற்றத்தை நோக்கி செல்ல கிறிஸ்து இன்று நமக்குக் கற்பிக்கின்றார்.

எபேசியருக்கு எழுதிய கடிதத்தில் பவுல் கூறுவது போல, உலகம் தோன்றுவதற்கு முன்பே கடவுள் நம்மைக் கிறிஸ்து வழியாகத் தேர்ந்தெடுத்தார்...கடவுளே, நம்மை அவரின் பிள்ளைகளாகத் தேர்ந்துகொள்வதில் எவ்வளவு பெரிய உரிமை மற்றும் பரிசு! எனவே, "கடவுளின் பிள்ளைகளாகிய நாம், நம்முடைய சொந்த மாட்சிக்காக வாழ்கிறோமா, அல்லது கடவுளின் மாட்சியைப் புகழ்வதற்காக வாழ்கிறோமா? என்று நம்மையே நாம் கேட்டுக்கொள்ள வேண்டும் ✣

**இன்றைய வாசகங்கள்:**

ஆமோஸ்: 7: 12-15

திருப்பாடல்: 85: 9-14

எபேசியர்: 1: 3-14

மாற்கு 6: 7-13

INTERNAL CIRCULATION ONLY

BUL 28/2021

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

# CHURCH OF OUR LADY OF FATIMA

Jalan Sultan Abdul Samad
50470 Kuala Lumpur, Malaysia
Tel: +603.2274 1631 / 2389 7244
Email: fatimachurch@archkl.org
FB: facebook.com/fatima.church
Web: www.fatimachurchkl.com

**Parish Administrator: Rev. Fr. Dr. Clarence Devadass**
**Asst Priest: Rev. Fr. Bernard Hyacinth, SJ**
**Office Administrator: Ms. Juliet Sylus**

*To contact the Parish Office outside office hours, kindly WhatsApp: 016.650 5039 (emergencies only).*

**Parish Office Hours:**
*The Parish Office closed during the MCO.* If you need to contact us, kindly call or text: 016.650 5039 or you may email: fatimachurch@archkl.org




## கோவிட்-19 உணவு நிவாரண உதவி

இந்த பொது முடக்கம் பல மக்களை, குறிப்பாக ஏழைகளையும் தேவையில் இருப்போரையும் பெரிதும் பாதித்துள்ளது என்பதை நாம் அனைவரும் அறிந்துள்ளோம். உணவு மற்றும் அடிப்படை தேவைக்காக ஏங்குவோரின் எண்ணிக்கையும் தற்போது அதிகரித்துள்ளது.

இப்பெரும் தேவையின் சுமையை குறைக்கும் வகையில், கோலாலம்பூர், நமது பத்திமா அன்னை ஆலயமும் பிரிக்பீல்ஸ், மஹா விஹாரா பௌத்த ஆலயமும் இணைந்து தேவையில் இருப்போர்க்கு உணவு வங்கி ஒன்றினை அமைக்க ஏற்பாடு செய்துள்ளது.

ஒவ்வொரு வழிபாட்டுத் தளத்திலும் தனித்தனி உணவு வங்கிகளை அமைப்பதற்கு பதிலாக, குடியுரிமை, இனம், மத பேதமின்றி அதிகமாக மக்களைச் சென்றடைய எங்கள் உணவு வங்கியை ஒன்றாக கொண்டு வருகிறோம். தேவைப்படுபவர்களுக்கு ஏற்ப உணவு விநியோகம் செய்யப்படும். (மேலும் விவரங்கள் விரைவில்)

இந்த முயற்சியில் பங்கிற்கு ஆதரவு அளிக்க முடிந்தால், நாங்கள் பின்வரும் பொருட்களை மட்டுமே நாடுகிறோம்: அரிசி (5 கிலோ), சீனி (1 கிலோ), சமையல் எண்ணெய் (1 லீ), காப்பி, டீபாக்ஸ், மைலோ, கொன்டீசன் பால், உப்பு, கறி தூள், பி ஹூன், மாவு (1 கிலோ) உடனடி நூடுல்ஸ், பிஸ்கட், முட்டை, சார்டின், பற்பசை மற்றும் குளியல் சவர்க்காரம். நீங்கள் இந்த பொருட்களை இயங்கலையில்/*Online* வாங்கலாம் மற்றும் காலை 9:00 மணி முதல் மாலை 6:00 மணி வரை நீங்கள் இப்பொருள்களை ஆலயத்தில் வழங்கலாம்.

அதற்கு பதிலாக நீங்கள் பணமாக அனுப்ப விரும்பினால், தயவுசெய்து பங்கு வங்கி கணக்கிற்கு அனுப்பவும்: **Church of Our Lady of Fatima [CIMB 800 083 3691]** மற்றும் **'Covid-19 Food Aid'** என்பதைக் குறிக்கவும். பரிவர்த்தனை உறுதிப்படுத்தலுக்கு பங்கு மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள்: **fatimachurch@archkl.org** அல்லது புலனத்திற்கு/ **Whatsapp: 016.650 5039** அனுப்பவும்.

இந்த கூட்டு திட்டம் 7 முதல் 31 ஜூலை 2021 வரை இருக்கும் (தேவைப்பட்டால் நீட்டிக்கப்படும்). வாருங்கள் தேவைப்படுபவர்களுக்கு உதவ ஒன்றிணைந்து செயல்படுவோம். மனிதநேயம் மேலோங்க வேண்டிய நேரம் இதுவே.

## சகாய மாதாவுக்கு நவநாள்

இந்த நடமாட்ட கட்டுபாட்டுக் காலத்தில், சகாய மாதாவுக்கு நவநாள் செபங்கள் இயங்கலை வழி ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 4.00 மணிக்கு நடபெறும். எங்களோடு செபத்தில் இணைய உங்களை அன்போடு அழைக்கின்றோம். இதில் கலந்து கொள்ள நீங்கள் வலையொளி அலைவரிசைக்கு YouTube channel: https://bit.ly/olfkl அல்லது முகநூலுக்கு Facebook Page: facebook.com/fatima.church செல்லவும்.






## திவ்விய நற்கருணை ஆசீருக்கு முன் செபம்

கோலாலம்பூரின் பேராயர், பேரருள்திரு ஜூலியன் லீயாவ், 15 ஜூலை 2021 வியாழக்கிழமை இரவு 9:00 மணி முதல் இரவு 10:00 மணி வரை பெருந்தொற்று முடிவுக்காக திவ்விய நற்கருணை ஆசீருக்கு முன் இயங்கலை /*Online* வழி செப ஆராதனையில் பங்கெடுக்க நம்மை அழைக்கிறார். நீங்கள் இச்செபத்தில் வலையொளி/*YouTube* வழியாக இணையலாம்: tv.archkl.org

## நமது கார்மேல் அன்னையின் நினைவு நாள்



ஜூலை 16, 2021 அன்று (நமது கார்மேல் அன்னையின் நினைவு நாள்), கோலாலம்பூர் மறைமாவட்ட கத்தோலிக்கர்களாகிய நம்மை, தெய்வீக மருத்துவரின் தாயான மரியாளின் பரிந்துரையோடு செபிக்க அழைக்கப்படுகிறோம். தனிநபர்களாகவோ அல்லது குடும்பங்களாகவோ, அவரவர் இல்லங்களில் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் துயர் நிறை மறையுண்மைகளை ஜெபமாலையில் தியானித்து உணர்வுமிக்க முயற்சியை மேற்கொள்ள அழைக்கப்படுகிறோம். பாவத்திற்கும், சிலுவையில் மரணத்திற்கும் எதிரான அவர் பெற்ற வெற்றி இந்த சோதனையிலிருந்து நம்மை விடுவிக்கட்டும்




## பங்கு அலுவலக அடைப்பு

நடப்பில் இருக்கும் பொது முடக்கத்தின் காரணமாக, பங்கு அலுவலகம் தொடர்ந்து மூடப்பட்டிருக்கும். இருப்பினும் பங்கு அலுவலகப் பணியாளர்கள் வீட்டில் இருந்தபடியே தங்கள் பணியைச் செய்கிறார்கள். தேவைகள் இருப்பின் பங்கு அலுவலகத்தை கைபேசி 016-650 5039 எண்ணுடன் தொடர்பு கொண்டோ அல்லது குறுஞ்செய்தியோ அனுப்பலாம். அல்லது மின்னஞ்சல் வழி தொடர்பு கொள்ளலாம். fatimachurch@archkl.org

## முதியோர்க்கான கிறிஸ்துவ புதுமுக சடங்கு (RCIA)

கத்தோலிக்க நம்பிக்கையைப் பற்றி ஆழமாக ஆய்ந்து அறிந்திட உங்களுக்கு அல்லது உங்களுக்கு தெரிந்தவர்களுக்கு ஆர்வமா? உங்கள் கத்தோலிக்க வாழ்க்கைத் துணையோடு ஆலயத்தில் அமர்ந்து, கத்தோலிக்கராக மாற என்ன செய்ய வேண்டும் என பல ஆண்டுகளாக யோசித்துக் கொண்டிருக்கிறீர்களா? கடவுளைத் தேடும் ஒருவரைத் தெரிந்துகொண்டு, அந்த நபரை முதியோர்க்கான கிறிஸ்துவ புதுமுக சடங்கு வகுப்பிற்கு அழைக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் இது ஒரு தனிப்பட்ட அழைப்பாகவும் சவாலாகவும் கருதுங்கள். இந்த செயலின் மூலம் பெரியவர்கள் உரோமைய கத்தோலிக்க திருஅவையில் உறுப்பினர்களாகிறார்கள். நமது பங்கில் எதிர்வரும் ஆகஸ்ட் 2021 முதல் முதியோர்க்கான கிறிஸ்துவ புதுமுக சடங்கு வகுப்பைத் தொடங்கவுள்ளோம். கூடுதல் தகவலுக்கு அல்லது பதிவு செய்ய பங்கு மின்னஞ்சலுக்குச் செல்லவும். fatimachurch@archkl.org

## திருப்பலிக்கு பெயர் ஒப்புக்கொடுத்தல்

இக்காலக்கட்டத்தில் ஆலயமும் ஆலய அலுவலகமும் மூடப்பட்டிருப்பதால், நீங்கள் திருப்பலிக்கு பெயர்களை ஒப்புகொடுத்தலையும், அல்லது நமது பங்கிற்கு பொருளுதவிகளையும் கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு தொடர்ந்து செய்யலாம்.

வங்கி விவரம்
வங்கி/ Bank : CIMB
கணக்கின் பெயர்/ Account Name : Church of Our Lady of Fatima
கணக்கின் எண்/ Account Number : 8000833691

தொகையும் விளக்கமும்
பங்கு அலுவலகம் சரியான முறையில் கணக்கு அறிக்கை வைத்துக் கொள்ள உங்களின் இயங்கலைப் பணப் பறிமாற்றத்தில் (Online Transfer) கீழ்க்கண்ட தகவல்களைக் குறிப்பிடவும்.

1. தொகை
2. நோக்கம் (பின்வருவனவற்றுள் ஏதாகிலும் ஒன்று) திருப்பலி கருத்துகள் (உங்கள் பெயர்களையும் திருப்பலிக்கு ஒப்புக்கொடுக்கும் பெயர்களையும் உள்ளிடவும், எ.கா. நன்றியறிதல்/ சிறப்புக் கருத்து/ ஆன்ம இளைப்பாற்றி)

உறுதியாக்கம் (வைப்பு சீட்டு/ Bank-in-Slip)
பணப்பறிமாற்றத்தை உறுதி செய்து எங்களுக்கு அனுப்பி வைப்பது மிக முக்கியமானது. மின்னஞ்சல்/ Email : fatimachurch@archkl.org அல்லது புலனம்/ Whatsapp: 016-6505039

## ஞாயிறு காணிக்கைகளும் நன்கொடைகளும்

பொது திருப்பலிகள் இரத்து செய்யப்பட்டிருக்கும் இக்காலக்கட்டத்தில், உங்கள் காணிக்கைகள் அல்லது நன்கொடைகளை 'டச் என் கோ' செயலி (Touch n Go App) வழி அனுப்பும் வசதி இப்பொழுது உள்ளது. தகவல் குறியீட்டை அலகீடு செய்து, (QR scan) உங்கள் தொகையை அதில் சேர்த்து அனுப்பவும். (சேவைக்கான பிடித்தம் ஏதும் இல்லாமல் இருக்க வேண்டும்) அடுத்த நாள் அத்தொகை ஆலய கணக்கு வரவில் சேர்த்துக் கொள்ளப்படும்.

CHURCH OF OUR LADY OF FATIMA

Have your customers scan this QR code to receive payments.

## திருப்பலிக்கு முன்பதிவு

நடமாட்ட காட்டுபாட்டு உத்தரவு தளர்த்தப்பட்ட பின் திருப்பலிக்கு முன்பதிவு செய்பவர்கள் கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றவும்.

1. அதிச ஒருங்கிணைப்பாளரைத் தொடர்பு கொள்ளுதல்.
2. ஆலய அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளுதல் (03 22741631).
3. இயங்கலைப் பதிவு https://fatimachurchkl.com/management-system

திருப்பலியில் கலந்து கொள்வதற்கான குறுஞ்செய்தியை பெறும் வரை காத்திருக்கவும். குறுஞ்செய்தி கிடைக்கப்பெறா விட்டால், திருப்பலியில் கலந்து கொள்வதை தவிர்க்கவும்.

STAY SAFE
together we will get through this